# கொரோனாவைரஸ் (COVID-19) தடுப்பு:

*பொதுவான பணியிடத் தேவைகள் – சுருக்கம்*

*The Department of Labor & Industries (L&I) (தொழிலாளர் & தொழில் துறை) தொழில் உரிமையாளர்களை பாதுகாப்பானதும் சுகாதாரமானதுமான பணியிடங்களை வழங்கவும் கொரோனாவைரஸ் பரவலைத் தடுப்பதற்கான ஆளுநரின் ஆணையை செயல்படுத்தவும் வலியுறுத்துகிறது.*

## தொழில் உரிமையாளர்களுக்கான கட்டாய பொதுத் தேவைகள்

### சமூக இடைவெளி

- சாத்தியமானபோது பணியாளர்கள் சகபணியாளர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் ஆறு அடி தூரம் விலகியிருப்பதை உறுதிசெய்தல்.
- சமூக இடைவெளி சாத்தியமில்லையெனில், கொரோனாவைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு தடைகள் மற்றும் பிற நிரூபிக்கப்பட்ட தடுப்பு முறைகளைப் பயன்படுத்தலாம்.
- சமூக இடைவெளிக்கு வாய்ப்பில்லாத இடங்களில் முகத்தை மூடும் துணிகள், முகக்கவசங்கள் அல்லது சுவாசக்கருவிகளை பயன்படுத்துவதை உறுதிசெய்தல்.

### போதிய அளவிலும் அடிக்கடியும் கைகளை கழுவுதல்

- சுத்தமானதும் சூடான அல்லது வெதுவெதுப்பான நீர், சோப் மற்றும் காகிதத் துண்டுகளுடன் உள்ள நிலையான அல்லது கையில் எடுத்துச்செல்லத்தக்க கைகழுவும் உபகரணங்களை வழங்குதல்.
- வேலைக்கு வந்ததும், இடைவேளைகளின் போதும், ஓய்வறைகளைப் பயன்படுத்தும்போதும், உண்பதற்கு முன்னும் பின்னும், மது அல்லது பாக்கு பொருட்களைப் பயன்படுத்தும்போதும் மற்றும் பிற அசுத்தமான மேற்பரப்புகளைத் தொட்ட பின்னும் கைகளை கழுவ வலியுறுத்துதல்.
- மற்றவர்களால் தொடப்பட்ட பொருட்களைக் கையாண்டபின் அடிக்கடி கைகளை சுத்திகரிக்க (கைகளை கழுவுவதற்கு இடையில்) கையில் எடுத்துச்செல்லத்தக்க கலன்களில் கை சுத்திகரிப்பான் நிலையங்கள்/வழங்கல்கள், துடைப்புத் தாள்கள் அல்லது கைதுடைக்கும் துண்டு போன்றவற்றை வழங்குதல்.

### வழக்கமானதோடு கூடிய கூடுதல் சுத்தப்படுத்தல் மற்றும் சுத்திகரித்தல்

- அடிக்கடி சுத்தப்படுத்தலும் சுத்திகரித்தலும் உள்ளடங்கிய ஒரு துப்புரவு அட்டவணையை அமைத்தல்.
- COVID-19 தொற்று சந்தேகிக்கப்பட்டபின் அதிக சுத்தத்திற்கும் சுத்திகரிப்புக்கும் போதிய வழங்கல்களை உறுதிசெய்தல்.
- அதிகம் தொடப்படும் மேற்பரப்புகளை அடிக்கடி தொற்று நீக்கம் செய்யவும்.
- இரசாயனங்களைக் கையாளும்போது பணியாளர்கள் தடுப்பு கையுறைகள் மற்றும் கண்/முகக் காப்புகளை அணிவதை உறுதிசெய்யவும்.
- ஒவ்வொருமுறையும் பகிரப்பட்ட பணி வாகனங்களை வெவ்வேறு உபயோகிப்பாளர்கள் பயன்படுத்தியதும் சுத்தப்படுத்தப்படுவதையும் தொற்று நீக்கப்படுவதையும் உறுதிசெய்வதோடு ஒரே நபர் மட்டுமே அதை பயன்படுத்துவதாயிருந்தால் சீரான இடைவெளிகளிலும் அதைச் செய்யவேண்டும்.

- தளத்தில் அனைத்து தொற்று நீக்கத்தும் பாதுகாப்பு தரவு தாள்களை (SDSs) பராமரிக்கவும்.

## நோயுற்ற பணியாளர்களுக்கு நடைமுறைகளை ஏற்படுத்துதல்

- பண்ணை வீட்டில் இருக்கும் நோயுற்ற பணியாளர்களை வீட்டிலேயே இருக்கவோ அல்லது தொடர்ந்து தனிமைப்படுத்திக்கொள்ளவே வலியுறுத்துதல்.
- COVID-19 தொற்று அறிகுறிகள் அதிகரிக்கும் பணியாளர்களை அடையாளம் கண்டு வீட்டிற்கு அனுப்பவோ அல்லது தனிமைப்படுத்தவோ செய்தல்.
- COVID-19 தொற்று சந்தேகிக்கப்பட்ட அல்லது உறுதிசெய்யப்பட்ட ஒரு பணியாளரைப் பற்றி தெரிவிக்கப்பட்டபின் நன்றாக சுத்தம் மற்றும் சுத்திகரிக்கப்படும்வரை தற்காலிகமாக அவ்விடத்தை காவல் வளையத்துக்குள் வைத்திருக்க வேண்டும்.

## COVID-19 பணியிட அபாயங்கள் குறித்த பணியாளருக்கான கல்வி

பணியாளர்களால் நன்கு புரிந்துகொள்ளப்படும் மொழியில், கீழ்க்கண்டவை அவர்களுக்குத் தெரிந்திருப்பதை உறுதிசெய்யவும்:

- COVID-19 தொற்றுடன் தொடர்புடைய குறியீடுகள், அறிகுறிகள் மற்றும் நோய்க்காரணிகள்.
- பணியில் கொரோனாவைரஸ் பரவலை எவ்வாறு தடுப்பது.
- கைகளை குறைந்தது 20 நொடிகளுக்கு எவ்வாறு சோப் மற்றும் நீரினால் நன்றாகக் கழுவுவது.
- இருமல்களையும் தும்மல்களையும் மூடிக்கொள்வதன் அவசியம் மற்றும் கழுவாத கைகளால் முகத்தைத் தொடாமல் இருப்பது

* இது ஒரு சுருக்கம் மட்டுமே. மேலும் விபரங்களுக்கு, F414-164-000 *Coronavirus (COVID-19) Prevention: General Requirements and Prevention Ideas for Workplaces* பார்க்கவும்.